# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

நேரம் : 1.30 மணி          தமிழ்          மதிப்பெண்கள் : 50

14×1=14

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-

அ) பொருள் தருக.

1. கிளை
2. முரலும்

ஆ) பிரித்து எழுதுக.

1. கனகச்சுனை
2. பாடறிந்து

இ) சேர்த்து எழுதுக

1. முறை + எனப்படுவது
2. என்று+ஆய்ந்து

ஈ) கோடிட்ட இடத்தை நிரப்புக

1. அரசரை அவரது ________ காப்பாற்றும்.
2. காட்டிலிருந்து வந்த ________ கரும்பைத் தின்றன.

உ) சரியான விடையை எடுத்து எழுதுக.

1. நம்மை ________ ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

   அ) இகழ்வாரை   ஆ) அகழ்வாரை   இ) புகழ்வாரை

2. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ________ எல்லாம் முளைத்தன

   அ) சத்துகள்   ஆ) வித்துகள்   இ) பித்துகள்

ஊ) பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. பெயரெச்சத் தொடர் | - | கார்குழலி படித்தாள் |
| 2. வினைமுற்றுத்தொடர் | - | பாடி முடித்தாள் |
| 3. எழுவாய்த் தொடர் | - | எழுதியப்பாடல் |
| 4. வினையெச்சத் தொடர் | - | வென்றான் சோழன் |

II. அகரவரிசைப்படுத்துக:-          2

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுதி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக:-          4×2=8

1) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
2) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
3) எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

4) அரசன் தண்டிக்கும் முறை யாது?

5) பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?

IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:- 2×2=4

1) உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

2) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

3) மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:- 2×3=6

1) நமக்கு இருக்க வேண்டி பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக?

2) மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக?

3) தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

VI.அ) மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக: 2×1=2

1. முழுவதும்

2. வாழையடிவாழை

ஆ) கலைச்சொற்களை எழுதுக. 2×1=2

1. Horn

2. Flute

VII. அடிமாறாமல் எழுதுக:- 2+4=6

1) "சொல்" என முடியும் குறளை எழுதுக.

2) "ஆற்றுதல் என்பது" எனத் தொடங்கும் பாடறிந்து ஒழுகுதல் பாடலை எழுதுக.

VIII. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடை தருக:- 1×6=6

1) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

2) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

****/****

www.Padasalai.Net